நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
ஷப்றா
207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
2, R. A. De Mel Mawatte,
COLOMBO - 4.
Telephone:- 508087—90

வர் ஆண்டு 2022 ஆவணி 24 திங்கட்கிழமை (09-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 279

# புலிகளின் அழைப்பை அரசு பரிசீலிக்கிறது!

## பிரட்மன் வீரக்கோன் தகவல்

கொழும்பு, செப்டெம்பர், 9

"நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அறிவித்திருப்பதை அரசாங்கம் கருத்தில் எடுத்துள்ளது. நிலைமையை அரசு மிகக் கவனமாக அவதானித்துக் கொண்டிருக்கிறது"

— இவ்வாறு ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்திருக்கிறார்.

திரு. பிரபாகரன் அண்மையில் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில், ஸ்ரீலங்கா அரசுடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

அது குறித்துக் கேட்டபோதே திரு. வீரக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான எந்தச் சந்தர்ப்பத்தை

[2 ஆம் பக்கம் பார்க்க]

## பிரதான வீதியில் செல்ல அனுமதி

வவுனியா, செப். 9

வவுனியாவில் இருந்து பயணிகள் சாந்தசோலை காட்டுப் பாதையூடாக அல்லாமல், பிரதான பாதை வழியாகச் செல்ல நேற்று முதல் அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் பயணிகள் கஷ்டம் ஓரளவு நீங்கியது.

தாண்டிக்குளத்தில் இருந்து லொறிகள் மூலம் பயணிகள் நொச்சிமோட்டையைச் சென்றடைந்தனர்.

(ஓ-3)

## பிரேமாவை கொல்ல மொஸாட் திட்டம்!

கொழும்பு, செப். 9

தமது உயிருக்கு ஆபத்து விளைவிக்க இஸ்ரவேல் நாட்டு உளவுப்படையான மொஸாட் முயற்சிப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸா பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் பேசுகையில் இக்குற்றச்சாட்டை திரு. பிரேமதாஸா வெளியிட்டார்.

கொழும்பில் இஸ்ரவேல் நலன்காக்கும் பிரிவை மூடிவிட உத்தரவிட்டமை மற்றும் அந்த நாட்டுக்குத் தூதரக அந்தஸ்து வழங்க மறுத்தமை ஆகியவற்றுக்காக இஸ்ரவேல் தம்மை கொலைசெய்ய திட்டமிடுவதாகவும் திரு. பிரேமதாஸா சொன்னார்.

தம்மை அழிக்க எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவழிக்க இஸ்ரவேலின் மொஸாட் உளவுப்படை தயாராக இருப்பதாகவும் அவர் சொன்னார்.

## மணலாறில் மோதல் தொடர்கிறது

மணலாறுப் பகுதியில் நேற்று எட்டாவது நாளாக ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நித்திகைக்குளம் பகுதியில் நேற்றும் உக்கிர மோதல்கள் இடம்பெற்றன.

ஷெல் தாக்குதல்களும், விமானங்களின் அகோர குண்டுவீச்சுகளும் நேற்றும் நடந்ததாகவும்—

இதனால் காடுகள் தீப்பற்றி எரிவதாகவும்—

நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 250 பொதுமக்கள் பலி?

முல்லைத்தீவுக் காட்டுப் பகுதியில் கடந்த ஒரு வாரகாலமாக இடம்பெற்று வரும் சண்டைகளில் சுமார் 250 பேர் வரையில் பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய வானொலி நேற்றிரவு இச்செய்தியை அறிவித்தது.

மற்றைய பிரதேசங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட இராணுவத்தினர் காட்டுக்குள் இருக்கும் போராளிகளின் முக்கிய முகாம் ஒன்றைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதாகவும்—

இப்படையினர் புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

[உ-8]

## பிரேமாவுக்கு எதிராக ராணுவ அதிகாரிகள்!

கொழும்பு, செப். 9

இராணுவ உயர் அதிகாரிகள் சிலர் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான எம். பிக்களுக்கு ஆதரவாக செயற்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த எம். பிக்களை அவர்கள் சந்தித்துப் பேசியும் வருகின்றனர்.

இதனையடுத்து பக்கச்சார்பின்றி, நடுநிலையாகச் செயற்படும்படி இராணுவ அதிகாரிகளை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க எச்சரித்திருக்கிறார்.

கடந்த புதனன்று இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் இராணுவத் தளபதி இந்த எச்சரிக்கையை விடுத்தார். இராணுவ அதிகாரிகள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வியாபாரிகளுக்கான பாஸ்; 15-ம் திகதி முதல் புதிய விதி

யாழ்ப்பாணம், செப். 9

வியாபார நோக்கத்துக்காக வவுனியா செல்வோரின் பிரயாண அனுமதி நடைமுறையில் சில ஒழுங்குமுறைகள் செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு தெரிவித்திருக்கிறது.

புதிய ஏற்பாட்டின்படி ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வாரத்தில் இரு தடவைகள் மாத்திரமே பிரயாணம் செய்ய அனுமதி வழங்கப்படும். ஆண்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் மாற்றங்களின் விவரம் வருமாறு:-

★ வவுனியா, மன்னார் மாவட்ட மக்கள் — ஞாயிறும் புதனும் செல்ல முடியும்.

★ முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட மக்கள்— செவ்வாய், வியாழன்

★ யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவும் படையினரே மணலாறு சண்டையில்!

மணலாறு பகுதிச் சண்டையில் ஈடுபடுத்தப்படுவதற்காகவே ஆனையிறவு—வெற்றிலைக்கேணிப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினரில் பெரும்பாலானோர் வரவழைக்கப்பட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மணலாறு சண்டையில் இப்படையினர் தீர்க்கமான வகிபங்கு வகிப்பர் என்றும்—

மணலாறுப் பகுதியில் இருதரப்பினரும் தங்கள் ஆட்பலத்தைத் திரட்டி வருவதாகவும்—

ஒப்பரேசன் பலவேகயவுக்குப் பின்னர் இடம்பெறும் பெரும் சண்டையாக மணலாறு போர் கருதப்படுவதாகவும்—

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே லைவ்ஸ்" பத்திரிகை தெரிவித்தது.

(உ.எ)

## புலிகள் ஆதரவு மாநாடு; சென்னையில் 56 பேர் கைது

சென்னை- அம்பத்தூர்ப்பகுதியான அம்பத்தூரில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து மாநாடு நடத்த முயன்ற 6 பெண்கள் உட்பட 56 பேர் நேற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் சங்கத் தலைவர் பக்தவத்சலம் தலைமையில் விடுதலைப் புலிகள் இயக்க அனுதாபிகள் ஊர்வலமாக வந்தபோது பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

## கூடியிருந்த மக்கள் கூட்டம் மீது

## தாண்டிக்குளம் படையினர் தடியடி! இருவர் பலி!!

வவுனியா, தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியில் படையினர் கடந்த வெள்ளிக்கிழமை பயணிகள் மீது தடியடிப் பிரயோகம் நடத்தினர்.

அச்சமயம் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பயணிகள் சிதறி ஓடினர். கூட்ட நெரிசலில் சிக்குண்டு இருவர் அப்போது உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

தடைமுகாம் பகுதியில் பயணிகளும், வியாபாரிகளும் வவுனியாவுக்குச் செல்ல கூடியிருந்தபோதே படையினர் தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் இரு குழந்தைகள் உயிரிழந்தனர் என்று ஒரு செய்தியும், ஒரு பெண்ணும் ஒரு குழந்தையும் உயிரிழந்தனர் என்று மற்றொரு செய்தியும் தெரிவிக்கிறது.

(ஓ-எ-3)

## அ' புரவில் தாக்குதல்

கொழும்பு, செப் 8

அநுராதபுரம் மாவட்டம் கயன்கொல்லாவ இராணுவ முகாம் காவலரண் மீது வெள்ளி அதிகாலை 2. 15 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஓ-3)

## முச்சந்தி முரளி



அப்ப... புதுசா மொஸாட் பூச்சாண்டி காட்டத் துவங்கி இருக்கிறார் போலை

## மன்னாரில் கண்ணி; ராணுவ வாகனம் சிதறியது

### 5 படையினர் பலி; பலர் காயம்

கொழும்பு. செப். 9

மன்னார் மாவட்டம், வங்காலை — மன்னார் வீதியில் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் மதியம் 12. 30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் அந்த வாகனம் சிக்கிச் சிதறியது.

அதில் பயணம் செய்த 5 படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றும் படையினர் பலர் படுகாயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்னொரு சம்பவத்தில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பு விமான நிலையத்திலும் குண்டு வைக்கத் திட்டமாம்!

கொழும்பு, செப். 9

கொழும்பு விமான நிலையம், ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ராமேஸ்வர தய நிலையம் ஆகியவற்றையும் குண்டு வைத்துத் தகர்க்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருந்தனராம்!

குற்றப் புலனாய்வாளர்கள் இத்தகவலைத் தெரிவித்ததாக "சண்டே டைம்ஸ்" பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

கொழும்பில் அண்மையில் நடந்த வாகனக் குண்டு வெடிப்புத் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பல சந்தேக நபர்கள், இத்தகவல்களை வெளியிட்டதாகக் குற்றப் புலனாய்வாளர்கள் கூறியதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வாராந்த அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிப்பதற்காக விபசு மக்கிழமைகளில் பத்திரிகையாளர் மாநாடு கொழும்பு இரகமோ

[3 ஆம் பக்கம் பார்க்க]

## எந்நேரமும் தேர்தல் நடக்கும் வாய்ப்பு!

கொழும்பு, செப். 9

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் பொதுத்தேர்தல் ஒன்றுக்குத் தயாராக இருக்கும்படி ஜனாதிபதி பிரேமதாஸ கேட்டிருக்கிறார்.

கடந்த சனியன்று ஐ. தே. கவின் தேசிய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றைக் கலைக்கும் எண்ணம் தனக்கு இல்லாவிடினும்கூட, நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் தான் எந்நேரமும் தேர்தல் ஒன்றை நடத்தக் கோரலாம் என்று அவர் அங்கு சொன்னார்.

ஆளும் கட்சியிலிருந்து 8 எம். பிக்கள் வெளியேற்றப்பட்டுள்ள இந்த நேரத்தில் ஜனாதிபதியின் இந்தப் பேச்சு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## இரகசிய வாக்கெடுப்பு நடத்த வாய்ப்பு இல்லை

கொழும்பு, செப். 9

ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிரான குற்ற விசாரணை பிரேரணை நாடாளுமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டாலும் அந்த அப்பிரேரணை மீது இரகசிய வாக்கெடுப்பு நடத்த முடியாது.

நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு நாடாளுமன்றத்தின் தற்போதைய நிலையியல் கட்டளையில் இடமில்லை.

இவ்வாறு அரசமைப்பு சட்ட வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சட்ட வல்லுநர்கள் இப்படித் தெரிவித்திருப்பது குறித்து, ஐ. தே. கவின் அதிருப்திக் குழுவைச் சேர்ந்த திரு. காமினி திஸநாயக்காவிடம் கேட்டபோது "அவர்கள் அப்படிக் கூறியிருந்தால் அது சரியாக இருக்கலாம்" — என்று சொன்னார்.

## சுவரொட்டிகளை அகற்றப் பணிப்பு

கொழும்பு, செப். 9

சட்டத்துக்கு புறம்பான முறையில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை அகற்றும்படி பொலிஸாருக்குச் சட்டமா அதிபர் ஆலோசனை கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

"நாட்டில் ஸ்திரமின்மையை ஏற்படுத்த விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சதி நடவடிக்கைதான் லலித், காமினியின் கிளர்ச்சி" — என்று தெரிவிக்கும் சுவரொட்டிகள் கொழும்பில் காணப்படுகின்றன.

சிங்கள மொழியில் அச்சிடப்பட்ட அந்தச் சுவரொட்டிகள் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து அவரின் படத்துடன் கொழும்பு வீதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கடந்த 88, 89, 90 ஆம் ஆண்டு O/Lக்குரிய வர்த்தகம், கணக்கியல் வினா விடை விற்பனையாகின்றது. அறிவகம், வெலிங்டன் சந்திக்கு அருகாமை, யாழ்ப்பாணம். [இ/0444)

பாவித்த மரங்கள், சீற், முகட்டுச்சீற், கதவுகள், நிலைகள், 2x2' நெற் பிறேம் பலகைகள், மேசை, கதிரை, அலுமாரி, சோக்கேஸ், கடைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு தொடர்பு: 07, கைலாசபிள்ளையார், கோவில் பின் வீதி, நல்லூர். [18037]

### தேவை

ஆண்களுக்குரிய ஆடைகளை நன்கு வெட்டித் தைக்கக் கூடியவர்கள் உடன் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். தொடர்பு: இல: 349, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (18058)

குறைந்தது 250 கிலோ வரை நிறுக்கக்கூடிய மேடைத் தராசு உடன் தேவை விற்க விரும்புவோர் நிறுக்கக்கூடிய அளவு விலை விவரத்துடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும் சர்வோதய மாவட்ட இணைப்பாளர், 22, சிலன் வீதி இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம். (18054)

பெண்கள், குழந்தைகள் அனைவரதும் உடைகளை மிகவும் நாகரீகமான முறையில் வெட்டித் தைத்துக் கொடுக்கக் கூடிய பெண் ரெயிலர் உடன் தேவை. நேரில் வரவும். தகுந்த சம்பளம் தரப்படும். திருமகள் தையல் நிலையம், [கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட் முன்பாக] கல்வியங்காடு. [18041]

### தவறிவிட்டது

சிகொண்டா (Sekonda) மகளிர் கைக்கடிகாரம் பண்டத்தரிப்பு இளவாலை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் Dr. விக்னேஸ்வரராசா, சென்றல் ஆஸ்பத்திரி பண்டத்தரிப்புக்கு தகவல் கொடுக்கவும் சன்மானம் வழங்கப்படும். (18059)

### தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. தொடர்பு ஏசியன் ரெக்ஸ் ரெயில் பலாலி வீதி, திருநெல்வேலி. [18048]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், குதகக்குத்து, சருமநோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4265]

## தேவை

தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்தில் அனுபவமுள்ள போதனாசிரியர் உடனடியாகத் தேவை. விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்.

எம். தம்பித்துரை,
பொதுச் செயலாளர்,
வை. எம். சி. ஏ,
யாழ்ப்பாணம்.

[இ-0477]

## இலங்கை அரசாங்க எழுதுநர் கிராம சேவையாளர் போட்டிப்பரீட்சை

## பயிற்சி நெறி

விரிவுரைகள் ஆரம்பம்
15 - 09 - 1991

விரிவுரையாளர்கள்:
திரு. குணராஜா
திரு. குமாரவேல்

விண்ணப்பப் படிவங்களையும், விவரத் திரட்டினையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[0443]

## யாழ்ப்பாணம் - வை. எம். சி. ஏ. வர்த்தக நிறுவனம்

## பயிற்சி நெறிகள்

தட்டெழுத்து — ஆங்கிலத்திலும், தமிழிலும்.
சுருக்கெழுத்து — ஆங்கிலத்திலும், தமிழிலும்.
இத்துடன் ஆங்கிலமும் பொதுப் பாடமாகக் கற்பிக்கப்படும்.

மேற்கண்ட பயிற்சி நெறிகள்
01 - 10 - 1991 இல் ஆரம்பிக்கப்படவுள்ளன

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை கீழ்க்கண்ட விலாசத்திற்கு 28 - 09 - 1991 இற்கு முன்னர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எம். தம்பித்துரை,
பொதுச் செயலாளர்,
வை. எம். சி. ஏ.,
யாழ்ப்பாணம்.

(இ-0478)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி ஆண்டு ஆவணித் திங்கள் 26 ஆம் நாள் (11 - 09 - 1991) புதன்கிழமை முற்பகல் 10 51 மணிமுதல் 11.21 மணிவரை வரும் பூர்வதிருதியை திதியும், சித்திரை நக்ஷத்திரமும் சித்த சுபயோகமும் விருச்சிக லக்னமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்.

| எமது புத்திரன் திருநிறை செல்வன் | | எமது புத்திரி திருநிறை செல்வி |
|---|---|---|
| ரகு | ★★★★★ | காருணி |
| பங்காளர் ரவி அன் ராஜ் சில்க்ஸ் அவர்களுக்கும் | | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து திருமணத் தம்பதிகளை வாழ்த்திவருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள

திரு. திருமதி கந்தசாமிதுரை
(பங்காளர் ரவி அன் ராஜ் சில்க்ஸ்)
இல. 34, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமதி கா. சாமி
இல. 77/5, புங்கன்குளம் வீதி,
நலநீதன் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ ரவி அன் ராஜ் சில்க்ஸ் ★

[18026]

## மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கில நாவல்கள், சஞ்சிகைகளில் வரும் கதைகள் போன்றவற்றை தூய தமிழில் மொழிபெயர்ப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சொந்த இருப்பிடத்தில் இருந்து கொண்டும் மொழி பெயர்ப்பு செய்து தரலாம்.

விளம்பர இல: ஈ/106,
மே/பா. உதயன்,
யாழ்ப்பாணம்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
20 - 01 - 1934



ஆண்டவன் அடியில்.
09 - 09 - 1989

### அமரர் சுந்தரம் கிருஷ்ணபிள்ளை

(அக்கரையான் குளம்-கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், விக்கின விநாயகர் ஆலய நிர்வாகசபைப் பொருளாளர், யூனியன்குளம் மாணிக்கப்பிள்ளையார் ஆலய நிர்வாகசபைத் தலைவர், அரச கட்டட ஒப்பந்தக்காரர்)

எங்களை விட்டு பிரிந்து ஈராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களினின்று என்றுமே அகலாது.

மனைவி: சிரங்கம்,
மகன்: தியாகராசா,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். [17998]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
25 — 02 — 1937



மறைவு:
10 — 08 — 1991

அமரர்

### பொன்னுத்துரை பரமானந்தன்

(ஓய்வு பெற்ற உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

எம்மில் என்றும் அணையாத தீபமாய் நிறைந்து
எம்மையெல்லாம் ஆளாக்கிய அன்புத் தெய்வமே!
பாசத்தை கவி வடித்து
அன்பிலே அரவணைத்து முன்னேற்றம்
என்னும் பாதையிலே எம்மையெல்லாம் வாழவைத்து
நல்லொளி பெருக்கி பாதியிலே எம்மையெல்லாம்
தவிக்க வைத்து சென்ற அணையா சுடர் விளக்கே!
உங்கள் நாமம் என்றும் எம் நெஞ்சில் நீங்காது
நிலைத்திருக்கும்

அன்னாரின் ஈமக்கிரிகையில் நேரில் சமூகம் அளித்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு 09-09-1991 (இன்று) அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள வீடுக்கிருத்திய நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேத்தி.

அளவெட்டி வடக்கு, அன்னாகம். [4286]

## புலிகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யும் குழப்பக் கூடாது என்பதில் அரசு அவதானமாக இருக்கிறது.

இதனால் நிபந்தனையற்ற பேச்சுக் குறித்தும், மற்றைய கருத்துகள் குறித்தும் விடுதலைப் புலிகள் அண்மையில் விடுத்த அறிவிப்பை அரசு மிகக் கவனமாக பரிசீலித்து ஆய்வு செய்கிறது.'' — இவ்வாறு திரு. பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்ததாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
12 - 03 - 1959

இறப்பு:
20 - 08 - 1990

திதி:
09 - 09 - 1991



### இராசரத்தினம் தவராஜா

(பாலன்)

[சுவிஸ்சர்லாந்தில் அகாலமரணம்]

எட்டுவருடம் நீ சென்று எம்மை ஆற்றுவாய் என நாம் எண்ண
எட்டாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டாயோ?
இனி எப்பிறப்பில் உனைக் கண்டிடுவோம்
கட்டித் தழுவிடுவோம் அதுவும் புரியவில்லை.

உனது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

தந்தை, தாய்,
சகோதரர்கள்,
இ. துரைராசா,
ஏழுகோயிலடி,
ஏழாலை,

அத்தான், அக்கா,
மருமகள்,
திரு:திருமதி இராசரத்தினம்,
குப்பிளான்,
(பெற்றோர்).

[18050]

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தாயக மண்ணில்:
26 - 09 - 1964



தாயக மீட்பில்:
27 - 07 - 1991

27 - 07 - 1991 இல் ஆனையிறவு இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரமரணத்தை தழுவிக் கொண்ட வீரவேங்கை

### ● மேஜர் குகதாஸ் ●

### இராசரத்தினம் — இராஜேந்திரன் (இந்திரன்)

தம்பி நீ எம்மோடு நெடுந்தூரம்
வருவாய் என்று நம்பியிருந்தோமே
எங்களோடு உடன் பிறந்த நீ
எங்களை நடுவழியில் விட்டு ஏன் பிரிந்தாய்?
நீ மண்ணுக்குப் போராடினாய்
உன் உடம்பிலுள்ள இரத்தத்தை
மண்தான் குடித்து விட்டது
உன் அன்புச் சிரிப்பை யாருக்குக் கொடுத்தாய்
உன் அலங்கார நடையை யாருக்குக் கொடுத்தாய்
உன்னை இழந்து இதயம் துடிக்க நாம் அழுகிறோம்
எம் உயிருள்ளவரை உன்னை நினைத்து
உள்ளம் உருகுமடா
நாளை தமிழ் ஈழம் கிடைக்குமடா.

உன் பிரிவால் துயருறும்:
அக்கா, அத்தான், மருமக்கள்.

உரும்பராய் வடக்கு,
உரும்பராய். [18051]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தெற்குப் போர் – III

வெஸ்ட்மினிஸ்ரர் ஆட்சி முறை என்ற நாடாளுமன்ற சனநாயக ஆட்சிமுறை பல இன, பல மத மக்கள் வாழும் நாடுகளுக்கு ஒவ்வாதது. அது இலங்கை போன்ற பல இன மக்கள் வாழும் பல நாடுகளில் சிறுபான்மையினருக்கு உரிமையும், நீதியும் வழங்கத் தவறிவிட்டது. சிறுபான்மையினரின் அரசியல் அபிலாஷைகளுக்கும் சமூக பொருளாதார அபிவிருத்திகளுக்கும் நாடாளுமன்ற ஆட்சிமுறை எப்போதும், எல்லா வழிகளாலும் தடையாகவே இருக்கிறது.

மன்னர் ஆட்சி மக்களை அடிமைப்படுத்தியும், குடிமைப் படுத்தியும் அடக்கி ஆள்வதற்கு இடமளித்தது. அதனாலேயே மன்னர் ஆட்சிக்குப் பதில் மக்கள் ஆட்சி, முடியாட்சிக்குப் பதில் குடி ஆட்சி உருவாக்கப்பட்டது.

ஆனால் ஒரு நாட்டில் வாழும் மக்களில், பெரும்பாபாலானவர்களின் விருப்பு, வெறுப்புக்கு ஏற்ப அவர்களின் பிரதிநிதிகளால் நடத்தப்படும் அரசாங்கம் சிறுபான்மையினருக்கு நீதி வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

இலங்கை அதற்கு நல்ல உதாரணம். நாடாளுமன்ற ஆட்சிமுறையின் கீழ் பெரும்பான்மையினரான சிங்களவர்களால் மட்டுமே அரசாங்கத்தை உண்டாக்க முடியும். தமிழர்கள் ஓர் அரசாங்கத்தை உண்டாக்குவது குறித்துக் கனவும் காணமுடியாது. சிங்கள அரசுகள் சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்கியே ஆக வேண்டும் என்ற கட்டாயம், நிபந்தனை எதுவும் இல்லை.

அதன் காரணமாகவே தமிழ் மக்கள் ஆளப்படுபவர்களாகவும், சிங்களவர்கள் ஆளுபவர்களாகவும் தொடர்ந்தும் இருந்து வருகிறார்கள். தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக நடத்தவே சிங்களவர்கள் விரும்புகிறார்கள். சம உரிமைகள் வழங்கிச் சமத்துவமாக நடத்துவதற்குப் பின்னிற்கிறார்கள்.

இனப்பிரச்சினை என்ற ஒன்று கருக்கொண்டு இந்த நாட்டை உருக்குலைப்பதற்கும், தமிழ் மக்கள் இவ்வளவு இன்னல்களை அனுபவிப்பதற்கும் நாடாளுமன்ற ஆட்சி முறையே காரணம்.

எண்ணிக்கையில் அதிகமானோர் என்ற காரணத்தினால் பெரும்பான்மை இனத்தினரான சிங்களவர் மட்டுமே அரசாங்கத்தை உருவாக்க முடியும் என்ற நிலை மாறி சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களும்ஏனையோரும் சேர்ந்து மாறிமாறி அரசாங்கத்தை உருவாக்க வசதி செய்யப்பட்டால் அன்றி இலங்கைக்கு நாடாளுமன்ற ஆட்சி முறை ஒவ்வாததாகும்; ஒருபோதும் ஒத்துவராததுமாகும்,

இந்தப் பாதகமான நிலையை மாற்ற வேண்டும் என்று விருப்பம் இருந்தால், பெரும்பான்மையினருக்கு ஒரு சபையும், சிறுபான்மையினருக்கு ஒரு சபையும் என்ற (Bicameral) ஆட்சி அமைப்புத் தோற்றுவிக்கப்பட வேண்டும். பெரும்பான்மையினரின் சபை கீழ்ச் சபையாகவும், சிறுபான்மையினரின் சபை மேற் சபையாகவும் விளங்கலாம்.

கீழ்ச் சபை இயற்றும் சட்டங்கள், விதிகள் சிறுபான்மை இன மக்களுக்குப் பாதகமானவையாக இல்லை என்று உத்தரவாதம் செய்து மேற்சபை அங்கீகரித்தால் மட்டுமே அவை செல்லுபடியாகும் என்று நிர்ணயிக்க வேண்டும்.

இதே அடிப்படைக் கோட்பாட்டுடன் வேறு மாற்று முறைகள் குறித்தும் சிந்திக்கலாம்.

## ஒப்பந்தத்தை ரத்து செய்து கச்சதீவை கைப்பற்றுக!

### அ. தி. மு. கழக எம். பி. கோரிக்கை

புதுடில்லி, செப். 9

இலங்கையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்து விட்டு கச்சதீவை இந்தியா கைப்பற்ற வேண்டும்.

இவ்வாறு இந்திய மேல் சபையான ராஜ்ய சபையில் அண்ணா தி. மு. க. உறுப்பினரான திரு. நாஞ்சில் வின்சென்ட் அண்மையில் கோரிக்கை விடுத்தார்.

கடந்த சில ஆண்டுகளில் இராமேஸ்வரம் பகுதியில் 100மீனவர்கள் வரைஸ்ரீலங்கா கடற்படையால் கொல்லப்பட்டுள்ளனர்.

இதற்கு காரணம் இந்தியா வசம் இருந்த கச்சதீவு இப்போது ஸ்ரீலங்காவிடம் இருப்பது தான்.

எனவே இந்தியா இனியும் பார்த்துக் கொண்டிராமல் ஒப்பந்தத்தை ரத்துச் செய்து விட்டு கச்சதீவைக் கைப்பற்ற வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

## 900 படகுகள் அணிவகுப்பு

சென்னை, செப். 9

கச்சதீவை இலங்கையிடம் இருந்து திரும்பப் பெற வேண்டுமென்று கோரி தமிழக மீனவர்கள் இராமேஸ்வரத்தில் வெள்ளியன்று வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினர்.

இராமேஸ்வரம் பகுதியில் 900 படகுகள் அணியாக நிறுத்தப்பட்டு இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. [ஒ-3]

## மீனவர் மீது ஸ்ரீலங்காப் படை இராணுவ நடவடிக்கையா?

### இந்திய அரசு சீற்றம்!

கொழும்பு, செப். 9

ஸ்ரீலங்கா கடல் எல்லைக்குள் பிரவேசிப்பதாகக் கூறப்படும் இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் இராணுவ நடவடிக்கை எடுப்பதை நிறுத்த வேண்டும் என்று இந்தியா கேட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் என். என். ஜா இந்திய அரசின் இக்கருத்தை ஸ்ரீலங்கா அரசிடம் தெரிவித்திருக்கிறார்.

இத்தகைய மீனவர் மீது சட்டப்படியான நடவடிக்கைகளையே ஸ்ரீலங்கா கடற்படையினர் எடுக்க வேண்டும் என்றும் புதுடில்லி அரசு கோரியுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி கச்சதீவுக் கடலில் வைத்து கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இந்திய மீனவர்கள் காயமடைந்தனர் என்பது தெரிந்ததே.

## பிரேரணையை நிராகரிக்க சபாநாயகருக்கு உரிமை

கொழும்பு, செப். 6

ஜனாதிபதி பிரேமதாஸா மீது கொண்டுவரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணையை செல்லுபடியற்றது என்று அறிவிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு இருப்பதாக அரசமைப்பு நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அரசியல் குற்றப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளதாகக் கூறப்படும் எம். பிக்களின் கையொப்பங்கள் மோசடி செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்படின் அப் பிரேரணையை செல்லுபடியற்றது என்று கூறி அதனை சபாநாயகர் நிராகரிக்க முடியும் என்று அரசமைப்பு நிபுணர்கள் கருதுகின்றனர்.

## நான் லிபியா போயிருந்தால் இங்கு என்ன நடந்திருக்கும்?

### ஜனாதிபதி பிரேமதாஸா கேள்வி

கொழும்பு, செப். 9

"அண்மையில் என்னை லிபியாவுக்கு வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் நான் போகவில்லை. அமைச்சர் மன்சூரை அங்கு அனுப்பினேன். வேலைப்பளு காரணமாகத்தான் நான் அங்கு செல்வதைத் தவிர்த்தேனா? இல்லை. நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் இல்லாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

— இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஜனாதிபதி பிரேமதாஸா. நேற்று முன்தினம் ஐ. தே. கட்சியின் தேசிய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கேட்டார்

"நாட்டிலிருந்து இந்திய அமைதிப் படையை வெளியேற்றாமல் விட்டால் பெரும் நிதி உதவி அளிப்பதாக சிலர் என்னிடம் கூறினர்; ஆனால் நான் அதற்கு இணங்கவில்லை.

உதவிகளுக்காக எனது நாட்டின் இறைமையைப் பலி கொடுக்க நான் தயாரில்லை என்று அவர்களிடம் கூறினேன்." — இப்படி அவர் மேலும் சொன்னார். [உ]

## லியனாராய்ச்சி நினைவு தினம்:

## லண்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டன், செப். 9

சட்டத்தரணி லியனாராய்ச்சி கொலையுண்ட மூன்றாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி கடந்த வாரம் லண்டனில் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன.

"ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம்" இவற்றை ஏற்பாடு செய்திருந்தது.

முன்னாள் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரான பிரின்ஸ் குணசேகரவும் கூட்டத்தில் உரையாற்றினார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதை அவர் தமது உரையில் கண்டித்துப் பேசினார்.

## பெண் பலி

அரியாலை, கலைமகள் வீதியில் நேற்று நடந்த மினி பஸ் விபத்தில் பாதசாரியான பெண் ஒருவர் மரணமானார்.

அரியாலையைச் சேர்ந்த [illegible] (30 வயது) என்பவரே மரணமானவர் ஆவார். (ஒ-[illegible])

## யாழ். இந்துவின் 75வது சாரணர் ஆண்டு விழா

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். இந்துக் கல்லூரியில் சாரணர் இயக்கம் ஆரம்பித்து அடுத்த மாதம் 24 ஆம் திகதியுடன் 75 வருடங்கள் பூர்த்தியடைகின்றன.

பவள விழாக் காணும் சாரணிய இயக்கத்தை கௌரவிக்கும் முகமாக இந்துக் கல்லூரி அதிபர் இந்த ஆண்டு மூன்றாம் தவணையை சாரணர் தவணையாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். (த)

## கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தய நிலையத்தில் கூட்டப்படும்போது அங்கு குண்டு ஒன்றை வெடிக்க வைக்கவும் புலிகள் திட்டமிட்டிருந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புகளை நடத்துவதற்காக தமது இயக்கத்தைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் கொழும்புக்கு அனுப்பி இருந்தனர்.

—இவ்வாறு ஊற்றுப் புலனாய்வாளர்கள் மேலும் தெரிவித்தனர். [உ]

## வியாபாரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாவட்ட மக்கள்—திங்கள், சனி

★ ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒழுங்கில் அனுமதி வழங்கப்படும்.

★ வெள்ளிக்கிழமைகளில் மேலதிகமாக இடமிருப்பின் மாத்திரம், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் செல்ல முடியும்.

★ ஊரடங்குச் சட்டம் போன்ற தவிர்க்க முடியாத காரணங்களினால் பயணம் தடைப்பட்டால் ஒரு மாவட்டத்துக்கு ஒரு நாள் வீதம், குறிப்பிட்ட நாள் செல்ல வேண்டிய மாவட்டங்களோடு இணைந்து போக அனுமதி வழங்கப்படும். [ஓ]

## மன்னாரில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகள் பதுங்கி இருந்து நடத்திய தாக்குதலில் நான்கு அரசப் படையினர் கொல்லப்பட்டனர் என்றும், வேறு 5 படையினர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பு இராணுவ வட்டாரங்களை ஆதாரங்காட்டி இந்திய வானொலி அறிவித்தது. (ஒ-எ-3)

## பிரேமாவுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மத்தியில் கடுமையான சொற்பிரயோகங்களைப் பாவித்து இராணுவத் தளபதி உரையாற்றியதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவ அதிகாரிகள் தங்களுக்கிடையே அரசியல் பேச்சுவோ வதந்திகளைப் பரப்பவோ கூடாது என்றும் அவர் சொன்னார்.

ஜனாதிபதி மீதான அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பாக இராணுவ அதிகாரிகள் தங்களுக்குள் விவாதிக்கக் கூடாது என்றும் அவர் பணிப்புரை விடுத்தார்.

இதற்கிடையில்—

ஜனாதிபதிக்கு எதிரான— ஐ. தே. கவில் அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த— தலைவர் ஒருவரை சிறிலங்கா இராணுவத்தின் சிரேஷ்ட உயரதிகாரி ஒருவர் தனியாகச் சென்று சந்தித்ததாகக் கூறப்படுகிறது.

அந்த அதிகாரிமீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இராணுவத் தலைமைப்பீடம் தற்போது முயற்சிப்பதாகவும் தெரியவருகிறது. [உ-எ-த]

## அரசுக்கு ரூ. 2ஆயிரம் கோடி உலக வங்கி கடன் உதவி!

சர்வதேச நாணயச் சபையும் உலக வங்கியும் சிறிலங்காவுக்கு கூட்டாக 50 கோடி அமெரிக்க டொலரைக் (சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாவைக்) கடனாக வழங்குவது நிச்சயமாகி விட்டதாக 'சண்டே ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சர்வதேச நாணயச் சபை விதித்த சகல நிபந்தனைகளையும் இலங்கை அரசு பூர்த்தி செய்திருப்பதாக கொழும்பில் உயர் நிதி அதிகாரி ஒருவர் சொன்னார்.

இந்தக் கடனுதவி ஆறு பிரிவுகளாக இலங்கைக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

## வடக்கே வெள்ளி மட்டுமே ம.எண்ணை எடுத்து வரலாம்

யாழ்ப்பாணம், செப். 9

வவுனியாவில் இருந்து வடக்கே மண்ணெண்ணெய் எடுத்துவர வெள்ளிக்கிழமை மட்டுமே அனுமதிக்கப்படும்.

கடந்த வாரம் முதல் இது நடைமுறைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் திங்கட்கிழமையே ம. எண்ணெய் எடுத்துவர அனுமதிக்கப்பட்டிருந்தது. (ஒ-3)

## ப. நோ. கூ. ச. கடனுக்கு பொருள்கள்

யாழ்ப்பாணம், செப். 9

ஒய்வூதியம் பெறுவோருக்கு 300 ரூபாவுக்கு மேற்படாமல் கடனுக்கு உணவுப்பொருள்கள் வழங்க சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சங்கத்தின் கிராமிய வங்கி மூலம் ஒய்வூதியம் பெறுவோரில், 300 ரூபா வைப்பில் உள்ளோருக்கே இந்தச் சலுகை வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## உற்சவகால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 9

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி நடைபெற்றுவரும் இசை மற்றும் சமய அரங்குகளில் பூங்காவனத் திருவிழா தினமான இன்று — இறுதி நாள் இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகள்:-

★ நாவலர் மணி மண்டபத்தில் — இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கத்தின் இசை அரங்கு.

★ சம்பன் கோட்டத்தில் —திரு. என். கே.பத்மநாதன், திரு. உ. இராதாகிருஷ்ணன் குழுவினரின் கெஞ்சிற் கச்சேரி.

★ ஞானசம்பந்தர் ஆதீனத்தில்— பிற்பகல் 2 மணிக்கு திரு. சண்முகவடிவேல் நிகழ்த்தும் திருமுருகாற்றுப்படை சொற்பொழிவு.

★ மேற்கு வீதி- பிள்ளையார் கோவிலில் — கானசுதாவாரிதி சி. வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் இராமாயண தொடர் விரிவுரையின் இறுதிப் பகுதியான 'ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம்'. [உ-5-30-126]

## இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம், செப். 9

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு, யாழ். மாநகர சபையினால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் மேற்கு வீதியிலுள்ள மாநகர சபை சுகாதார அலுவலகத்தில் பரிசில்கள் வழங்கப்படும்.

## மருத்துவ பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 9

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட இறுதிப் பரீட்சைகள் அக்டோபர் 21 ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சை இம் மாதம் 15 ஆம் திகதி நடைபெறவிருந்தது தெரிந்ததே. (உ - 3)

## இடம்பெயர்ந்த ஆசிரியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 9

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் இருந்து இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் மீண்டும் தத்தமது மாவட்டங்களுக்கு உடனடியாக கடமைக்குத் திரும்ப வேண்டும் என வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கோரி உள்ளது.

தாங்கள் இடம்பெயர்ந்த மாவட்டங்களுக்குச் செல்ல விரும்பாதவர்கள் தற்போது பணியாற்றும் இடங்களில் தொடர்ந்தும் பணியாற்ற விரும்பினால் தாங்கள் கடமையாற்றும் மாவட்ட கல்வி பணிப்பாளர் ஊடாக இடமாற்ற விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது. (இ-165)

## வெற்றி வடிவேலா!

ராகம்: காபி தாளம்: ஆதி

பல்லவி

நெஞ்சமெல்லாம் உனக்கே செஞ்சுடர் வேலவனே!
அஞ்சலென் றருள்வாய் ஐயா - முருகையா!
(நெஞ்......)

அனு பல்லவி

பல்கலைகள் செழித்துப் பல்திசையும் மணக்கும்
நல்லைநகர் வளரும்வெற்றிவடி வேலா!
(நெஞ்......)

சரணம்

இன்பமும் துன்பமும் எனக்கென்றும் மயிலோனே!
பொன்னுடன் பொருள் மற்றும் யாவும்நீ வேலோனே!!
அன்னையும் தந்தையும் அனைத்தும்நீ குமரோனே!
என்னுயிர்க் காதாரம் என்றும் நீ முருகோனே!!

— முருகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சி. மனோன்மணி

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியைச் சேர்ந்த சின்னத்துரை மனோன்மணி காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் பூபாலசிங்கம் [ஓய்வுபெற்ற சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்], புவனேஸ்வரி, கமலேஸ்வரி, குணரத்தினம் [சித்திரா ரேடர்ஸ் கொழும்பு], மனோகரன் [டென்மார்க்], திருச்செல்வன் [ஆசிரியர் ஞானபண்டித வித்தியாசாலை கொக்குவில்] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜீவா, கைலாசபிள்ளை [ஈஸ்வரி ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி], திருச்செல்வம் [சிமைக்ஸ் உரிமையாளர் தெகிவளை], சாரதாதேவி, நாகரத்தினம் [டென்மார்க்], சுபத்திராதேவி [உதவி அரசாங்க அதிபர் பணிமனை நல்லூர்] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியை திங்கட்கிழமை [9-9-91] காலை 10 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும்.

பொற்பதி வீதி,
கொக்குவில்.

தகவல்:
சி. திருச்செல்வன்

(17904)

## கந்தையா நாகலிங்கம்

கந்தரோடையைச் சேர்ந்த கந்தையா நாகலிங்கம் 8-9-91 காலை காலமானார். அன்னார் முன்னைநாள் தீர்வேலி ப. நோ. கூ. சங்கக் கிளை முகாமையாளரும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம், கதிர்காமநாதன், மகேந்திரன், சந்திரவதனா, புனிதவதி, லீலாவதி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திரு. க. அருளானந்தராசா, பதஞ்சலிநாதன், நவரத்தினராசா, திருமதி ப. பத்மாவதி (யாழ். போதனா வைத்தியசாலை), நாகலட்சுமி, குணராணி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கனகரத்தினம், கதிர்காமநாதன், திருமதி இ. தவமணி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பரமலிங்கம், தியாகராசா, காலஞ்சென்ற திருமதி ச. பரமேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கந்தரோடையில் 9-9-91 இல் காலை 11 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
அ. அருளானந்தராசா
(மருமகன்)

(17901)

## கதிரித்தம்பி செல்வராசா

[போமன் - இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்]

ஏழாலை மத்தியைச் சேர்ந்த கதிரித்தம்பி செல்வராசா 8-9-91 இல் காலமானார். இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், தயானந்தன் [சவுதி], சதானந்தன் [கனடா], சுலேந்திரன் [அமெரிக்கா], தயானினி [டென்மார்க்], கஜேந்திரன் [பிரான்ஸ்], லோகேந்திரன் [கிறீஸ்], குமுதினி, தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அல்லலிங்கம், பகீரதி ஆகியோரின் மாமனாரும், டெனிஸ், அனுஸ்தா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [9-9-91] காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

ஏழாலை மத்தி

[18062]

## திருமதி செல்வவதனா சசிதரன்

[தலைவி:- அரியாலை ஸ்ரீ கலைமகள் ச.ச. நிலைய மாதர் சங்கம், அரியாலை தெ. ப. கூ. சங்க மாதர் அவை]

திருமதி செல்வவதனா சசிதரன் அவர்கள் நேற்று [8-9-91] அகாலமரணமடைந்தார்.

அன்னார் டாக்டர் ப. சசிதரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நீலன் செல்லக்கண்டு செல்லம்மா தம்பதிகளின் மகளும், அல்வாயூர் ச.சி.பரஞ்சோதி ரீற்றா செல்வம் தம்பதிகளின் மருமகளும், சசிக்காந், சசீரா, சசீனா ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வநாயகம், செல்வநாதன், செல்வராஜா [ஆசிரியர் வர/வைத்தீஸ்வரா வித்தியாலயம்], செல்வராணி, செல்வக்குமார [ஜேர்மனி], செல்வலிங்கம், செல்வேந்திரன் [ஜேர்மனி], செல்வரஞ்சனா [அரியாலை தெ.ப. பொ.கூ. சங்கம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், சசிகரன், சசிகலா, சசிரேகா, சசிபாரதி [தேவரையாளி இந்துக் கல்லூரி], சசிவல்லவன் [நெல்லியடி ம. ம. வி], நடராசா ஆகியோரின் மைத்துனியும், அரியதுரை புவனேஸ்வரி, கனகசிங்கம் தங்கப்பாக்கியம், ஆனந்தராசா சிவமலர் ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [9-9-91] பி. ப. 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
டாக்டர் ப. சசிதரன்

34/2 கலைமகள் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

[17905]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-09-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தியாகி திலீபன் நினைவு தட, கள விழா நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 9

விடுதலைப் மக்கள் முன்னணியால் நடத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தட, கள விழாவின் யாழ். மாவட்ட ரீதியான இறுதி நிகழ்ச்சிகள் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

வட்டலை மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களே மாவட்ட ரீதியான போட்டியில் பங்குபற்றுவர்.

இதேவேளை—

யாழ். வட்ட அலையின் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

மருதங்கேணி வட்ட அலை மட்ட தட, கள போட்டி முன்னர் அறிவிக்கப்பட்டது போல் செம்பியன்பற்று ம. வி. மைதானத்தில் நடைபெறாது என்று தற்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போட்டி அம்பன் அமெரிக்க மிஷன் பாடசாலை மைதானத்தில 12, 13 ஆம் திகதிகளில் நடைபெறும்.

(உ.)

# விசேட பயண அனுமதி வழங்க புதிய அலுவலகம்

யாழ்ப்பாணம், செப். 9

வெளி மாவட்டங்களைச் சேர்ந்தோர் மற்றும் விதிவிலக்கின் அடிப்படையில் வடபகுதிக்கு வெளியே செல்ல விரும்புவோர் அனுமதி பெறுவதற்கு, கோண்டாவில் மாவட்டச் செயலகத்துக்குச் சமீபமாக நாளை முதல் புதிய அலுவலகம் ஒன்று இயங்க உள்ளது.

தமிழீழ போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த அலுவலகத்தில் பிரயாண அனுமதி பெறுவதில் ஏற்படும் பிரச்சினையைத் தீர்க்க தனிப்பிரிவு ஒன்றும் செயற்படும்.

(ஓ)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 9

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் மூகமத் [சிவஞானம் சுபாகரன் — அம்பாறை], குட்டி [லிங்கராஜா ரவிச்சந்திரன் — சாவகச்சேரி], வசந்தா [ஜெயவதனி சண்முகநாதன் — மாதகல்] ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

(ஓ)

## பட்டதாரி பயிலுனர் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 9

கல்வித் திணைக்களம் தவிர்ந்த ஏனைய திணைக்களங்களில் உள்ள பட்டதாரிப் பயிலுனர்களுக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

(உ - 5)

## எழுத்தறிவு தினம்

லண்டன், செப் 9

உலக நாடுகளில் சர்வதேச எழுத்தறிவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

# 27 தங்கக் கட்டிகளைக் கடத்திய மூவருக்கு ரூ. 2கோடி 20 லட்சம் அபராதம்

கொழும்பு, செப். 9

இந்தியன் எயர்லைன்ஸ் விமான மூலம் சிங்கப்பூரில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய மூன்று பயணிகளிடமிருந்து ஆயிரத்து 580 கிராம் எடையுள்ள 27 தங்கக் கட்டிகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

அம் மூவரும் விமான நிலையத்தை விட்டு வெளியேறுகையில் கைது செய்யப்பட்டனர்.

தங்கக் கட்டிகள் அவர்களது உடல்களில் மறைத்து வைத்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

மூவருக்கும் மொத்தமாக 2 கோடி 20 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## துணைப்படை வீரர் குண்டுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 9

முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணிப்பகுதியில் தேடுதல் நடத்த வந்த படையினர் மீது துணைப்படை வீரர் ஒருவர் குண்டுத் தாக்குதலை நடத்தினார்.

இதனை அடுத்து படையினர் தேடுதல் முயற்சியை கைவிட்டு திரும்பிச்சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-3)

கம்பன் கோட்ட இசையரங்கில் இன்று
கெஞ்சிற் கச்சேரி
நாதஸ்வர மேதை
என். கே. பத்மநாதன் அவர்களும்
வயலின் மேதை
இணுவை உ. இராதாகிருஷ்ணன் அவர்களும்
பின்னணிக் கலைஞர்களுடன் இணைந்து
வழங்குகின்றார்கள்.
(கி/0479)

உ
திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஆவணி மாதம் 26 ஆம் நாள் [11 - 09 - 1991] புதன்கிழமை முற்பகல் 10-28 மணிமுதல் 11-58 மணி வரை வரும் விருட்சிக லக்கின சுபமுகூர்த்தத்தில்

எங்கள் சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
★ தவராஜன் ★
அவர்களுக்கும்

எனது புத்திரி
திருநிறை செல்வி
★ சுமதி ★
அவர்களுக்கும்

திருவருள் கைகூடி மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்கு தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:

நா. நாகராஜாவும் பாரியாரும்,
19, சீனியர் ஒழுங்கை,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

திருமதி த. சுப்பிரமணியம்,
67/14, தர்மலிங்கம் அவெனியூ,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

[18061]

# மரண அறிவித்தல்

ரிஷிகேசவ -

## ஜீ. ஜீ. லக்ஷ்மி நாராயணன் சுவாமிஜீ

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னாளை இளவாலையை வசிப்பிடமாகக் கொண்டவரும், கிரிமலையில் தபால் அதிபராகக் கடமையாற்றியவருமான ரிஷிகேசவ ஜீ. ஜீ. லக்ஷ்மி நாராயணன் சுவாமிஜீ (08-09-91) நேற்றுக் காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகராசசேகரம் (உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் கச்சேரி யாழ்ப்பாணம்), தேவி இந்திராணி, தருலேந்திராணி (சுவிஸ்), சிவராசசேகரம் (இ. போ. ச. காரைநகர் டிப்போ சாரதி), விக்கினராசசேகரம் (சாரதி), கௌரி, இந்திராணி (சுவிஸ்), வாமனராசசேகரம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பத்மனேஸ்வரி குமாரசாமி (வர்த்தகர்), கிருட்ணமூர்த்தி (சுவிஸ்), மங்கையர்க்கரசி, புஸ்பலோசனி ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷ்யந்தி, கிரிசாந்தி, செந்தாமரையாசனி, செங்கமலச்செல்வி, ஜதுநந்தன், சந்துரு, சிவலக்கன், கஜலக்சி, கஜநாதன் ஆகியோரின் அன்புப் பேரனும், குகதாஸ் (பொலிஸ் இன்ஸ்பெக்டர், கொழும்பு), உமாதேவி, பவுன் ஆசிரியர் ஆகியோரின் தமையனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்தில் நேற்று (08-09-91) நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பழைய ஆஸ்பத்திரி,
வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
K. விக்னராசசேகரம்
(மகன்)

(17903)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



வடமராட்சி மண்ணில்
வீர ஜனனம் :
24-01-1974

ஆனையிறவு யுத்தத்தில்
வீர மரணம் :
27-07-1991

## பெண்புலி 2ஆம் லெப். ஜசீர்மா
(சிவலோஜினி சிவானந்த ஐயர்)

காலத்தால் அழியாத காவியமானாய்
கண்ணில் தெரியும் ஓவியமானாய்
நெஞ்சினில் விதைத்த நெருப்பானாய்
விடுதலைக்கே வித்தானாய்
என்னென்று உன் முடிவைக் கூற
ஏதும் அறியாது ஏங்குகிறோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

இக்கம்,
அல். வட மேற்கு.

[17902]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org